**வலல்லாவிட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வலல்லாவிட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் மிகை ரூபா 647,027 தொகையான போதிலும் இது திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுகையில் ரூபா 617,027 ஆகப் பதியப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15,000 தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணச் செலவினங்கள் வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சித் திணைக்களத்தினால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டியின் பெறுமதி மூலதனமாக்கப்படுகையில் 2014 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் வருடாந்தம் அறவிடப்பட்டிருந்த தவணைப்பண அளவு மாத்திரம் மூலதனமாக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. சபையால் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட்டிருந்த தவணைப்பணப் பெறுமதி ரூபா 1,412,546 தொகையான போதிலும் மொத்தத் தொகையும் மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிக் கணக்கும் மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 1,765,911 தொகையால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் சம்பள மீளளிப்புகளில் இருந்து குறைக்கப்பட்டிருந்த ரூபா 756,721 தொகை வண்டியின் கடன் தவணைப் பண மேற்குறித்த கடிதத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிராததன் காரணமாக அப் பெறுமதியால் பயன்பாட்டு சேவைகள் கணக்கு மீதியும் மாகாண சபைக் கடன் கணக்கின் மீதியும் ஆண்டின் வருமானச் செலவினமும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) இவ்வாறே முன்னைய ஆண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 655,825 தொகையான தவணைப் பணம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படுகையில் சம்பள மீளளிப்புக் கணக்கில் சேரவேண்டிய தொகை திரண்ட நிதியக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் செலவினம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) கப் வண்டியின் திருத்த வேலைகளுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டியிருந்த கடனுக்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடம் இருந்து மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 50,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இதற்கு மேலதிகமாக இத் திருத்த வேலைகளுக்காக மேலும் செலுத்த வேண்டியிருந்த தொகைக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த சம்பள மீளளிப்பில் இருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 250,000 தொகை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வருமான மானியக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கிற்குப் பதிலாக மூலதனச் செலவினம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திால் இருந்து பெறப்பட்டிருந்த கடனிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,525,713 தொகையில் ரூபா 1,284,841 தொகை கடன் கணக்கில் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 240,872 தொகையான வட்டியும் வங்கிக் கட்டணமும் வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத ரூபா 31,250 தொகைக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்ததன் காரணத்தால் ஏற்பட்ட தவறைச் சீராக்குவதற்காக ரூபா 31,250 தொகை திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக கணக்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டின் போது சபைக் கைத்தொழில் செலவினமாக ரூபா 1,581,665 கணக்கீடு செய்யப்பட்டிராத தவறைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது கைத்தொழில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக தொங்கல் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது முறையே இயந்திர உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்களின் அன்பளிப்பான ரூபா 1,687,774 தொகையும் ரூபா 119,817 தொகையும் அன்பளிப்புக் கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதியில் காசும் காசிற்குச் சமமானவைகளும் ரூபா 3,230,224 தொகையான போதிலும் தயாரிக்கப்பட்டிருந்த நிதிப் பாய்ச்சல் கூற்றின் படி, இது ரூபா 107,708,943 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

உரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 358,309,497 தொகையான 09 கணக்கு மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,288,036 ஆக இருந்ததுடன் இதனை ஒத்த முன்னைய ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,408,718 ஆக இருந்தது.

### 2.2 வங்கிக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் தொடர்ந்தும் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,394,836 கூட்டுத்தொகையான கணக்குகளில் பணப் பரிமாற்றம், நேரடிச் செலவுகள் தீர்க்கப்படுவதற்காக கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 03 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய வைப்பிலிடப்பட்ட போதிலும் தேறாத ரூபா 343,683 தொகையான காசோலைகளும் பணமும் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 188(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதில் உள்ளடக்கப்பட்ட சில மீதிகள் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தானவையாகக் காணப்பட்டன.

(இ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த இரு நடைமுறைக் கணக்குகளிற்கு உரித்தான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் விநியோகிக்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்கள் கடந்திருந்த ரூபா 360,646 தொகையான 107 காசோலைகள் தொடர்பாக கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 03 ஆம் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்படுகையில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 2,783 | 1,658 | 2,267 |
| (ii) | வாடகை | 29 | 29 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,000 | 4,637 | 326 |

### 2.3.2 வீதவரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதிவரி மீதி ரூபா 1,852,765 தொகையானதுடன் 2015 யூன் 30 ஆம் திகதி வரை இதில் ரூபா 294,932 தொகை அதாவது 16 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 ஏக்கர் வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 70,268 தொகையானதுடன் 2015 யூன் 30 ஆம் திகதி வரை இதில் ரூபா 9,048 தொகை அதாவது 12.8 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 கைத்தொழில் வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான கைத்தொழில் வரி மீதி ரூபா 119,210 தொகையானதுடன் 2015 யூன் 30 ஆம் திகதி வரை இதில் ரூபா 49,000 தொகை அதாவது 41 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 வியாபார வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வியாபார வரி மீதி ரூபா 225,040 தொகையானதுடன் 2015 யூன் 30 ஆம் திகதி வரை இதில் ரூபா 131,520 தொகை அதாவது 58 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.6 தரிப்பிட வாடகையும் இறைச்சிக் கடை வாடகையும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான தரிப்பிட வாடகை மற்றும் இறைச்சிக் கடை வாடகை மீதி முறையே ரூபா 26,550 தொகையாகவும் ரூபா 56,636 தொகையாகவும் இருந்ததுடன் இதில் 2015 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு தரிப்பிட வாடகை ரூபா 14,000 அறவிடப்பட்டிருந்த போதிலும் இறைச்சிக் கடை வாடகை எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.7 காணி ஏலவிற்பனை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் காணி ஏலவிற்பனை செய்யப்படுகையில் ஏலமிடப்பட்டிருந்த காணிகளின் விற்பனை விலையில் 1 சதவீத வருமானத்தை சபை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது சபையின் வருமானம் நிர்வாகிகளால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டின் 1 சதவீதத் தொகையாகக் காணிகள் விற்பனை இரண்டில் இருந்து ரூபா 224,357 தொகை 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீடும் சந்தை விற்னைப் பெறுமதிக்கும் இடையே வேறுபாடு சீராக்கப்பட்டு எஞ்சிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபைச் செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 6,607,115 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

ஹியும் குழாய்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக தனியார் நிறுவகத்திற்கு 2014 சனவரி 22 ஆம் திகதி ரூபா 78,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இச் செலவினம் சபையில் முன்வைக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்படுவதற்குப் பதிலாக சபைச் செயலாளரும் தலைவரும் அங்கீகரிக்கத்தக்க வகையில் ரூபா 10,000 இற்குக் குறைந்த வகையில் 10 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு ஒரு காசோலையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) நிர்மாணிப்புகள்**

2015 யூலை 09 ஆம் திகதி பின்வரும் நிர்மாணிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) கல்லனஹேன வீதியில் கால்வாய் அபிவிருத்தி – கிரயம் ரூபா 200,000**

- மேற்குறித்த செயற்திட்ட மதிப்பீட்டின் விடய இல. (12) இன் கீழ் (12’×12’×15’) அளவிலான 12 பாதுகாப்புக் கற்கள் தயாரிக்கப்பட்டு பொருத்தப்படுவதற்குப் பதிலாக ரூபா 14,012 தொகை மதிப்பிடப்பட்டு அத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த அளவிலான 06 பாதுகாப்புக் கற்கள் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன.

- மதிப்பீட்டின் விடய இல. (13) இன் கீழ் செயற்திட்டப் பெயர்ப் பலகை தயாரிக்கப்படுவதற்காக ரூபா 6,000 தொகை மதிப்பிடப்பட்டு அத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**ii. பெயர்ப் பலகை தயாரிக்கப்பட்டிராமை**

05 செயற்திட்டங்களுக்கு பெயர்ப் பலகை தயாரிக்கப்படுவதற்காக ரூபா 6,000 படி ரூபா 30,000 கூட்டுத்தொகை மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களிற்காக பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**iii. இத்தாபான வாராந்த சந்தை**

புர நெகும செயற்திட்டத்தின் கீழ் வாராந்த சந்தைக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் கடைகளுக்கு தராசுகள் தொங்கவிடப்படுவதற்கான முறை ஒன்று தயாரிக்கப்பட்டிராமையால் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 03 ஆம் திகதி வரையிலும் வாராந்த சந்தை விற்பனைக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டு மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,312,000 தொகையான 02 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 03 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்திசெய்யப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒரே காலப்பகுதியில் ஒரே சங்கத்தில் இருந்து ஒப்பந்தங்கள் பல மேற்கொள்ளப்பட்டிருந்தமை

2012 சனவரி 05 ஆம் திகதிய 1/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, மக்கள் அமைப்புகளுக்காக நேரடியாக ஒப்பந்தம் ஒக்கடைக்கப்படுகையில் உரிய சமூக அமைப்புகளுக்கு 03 ஒப்பந்தங்களுக்கு மேலதிகமான அளவில் ஈடுபடலாகாத போதிலும் விதி முறைகளுக்கு மாறாக ஒரே காலப்பகுதியின் போது 03 சங்கங்களால் 04 ஒப்பந்தங்களும் 07 ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) ஹியூம் குழாய்களின் விநியோகம்

2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 266,700 தொகையான பல்வேறு அளவுகளிலான 46 ஹியூம் குழாய்களின் தரம் குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவ் ஹியூம் குழாய்ச் செயற்திட்டத்திற்கான வழங்கல்களை இடைநிறுத்துமாறு களுத்துறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் சபைச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 09 ஆம் திகதி வரையிலும் இதில் 28 குழாய்கள் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 18 ஹியூம் குழாய்களும் இத்தாபான

உப அலுவலகத்திலும் வலல்லாவிட சபை வளாகக் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 17,550 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 ஹியூம் குழாய்கள் புஸ்ஸெல்ல வீதிக்கு விநியோகிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 யூலை 09 ஆம் திகதி பௌதீக மெய்மையாய்வின் போது இவ் ஹியூம் குழாய்களை ஸ்தாபித்த இடத்தைக் காண்பிப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர்.

### 3.3 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 2,014,440 தொகையான முற்பணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூரைல 03 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2004 யூலை 09 ஆம் திகதிய LG/05/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் படி, பிணை செலுத்தப்பட வேண்டிய 19 ஊழியர்களின் பிணைத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை சேவையில் ஈடுபட்டு இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் தொகையான ரூபா 105,183 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 09 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் வருமான அறிக்கையின் படி, 2014 ஆம் ஆண்டின் போது வலல்லாவிட தலைமை அலுவலக சேதனப் பசளை விற்பனையில் இருந்து ரூபா 18,000 தொகையான வருமானம் பெறப்பட்டிருந்த போதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பசளை அளவும் எஞ்சிய தொகை தொடர்பாகவும் உறுதிப்படுத்தப்படுவதற்காக இருப்புப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், நானாவித வங்கி மற்றும் கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சபை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 283,400 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 09 ஆம் திகதி வரையிலும் உரிய நிறுவகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபைக்கு உரித்தான எந்த வாகனம் தொடர்பாகவும் சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனம் பழுதுபார்க்கப்படுகையில் அல்லது உதிரிப் பாகங்கள் அகற்றப்படுகையில் அகற்றப்படும் உதிரிப்பாகங்களும் உபகரணங்களும், கருவிகளும், பொருள் விபரங்களும் குறிப்பிடப்பட்டு ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41.∴90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டுகளிள் போது பழுதுபார்ப்பிற்காக கராஜ்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 02 வாகனங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 09 ஆம் திகதி வரையிலும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

(i) சபையின் நிரந்தர பதவியணியில் 07 பேரின் பற்றாக்குறையும், 09 பேரின் மிகையும் அவதானிக்கப்பட்டது.

(ii) இதற்கு மேலதிகமாக அமைய அடிப்படையில் ஆயுர்வேத வைத்தியர்கள் 02 பேரும், 04 அமைய உத்தியோகத்தர்களும் பட்டதாரி பயிலுனர் ஒருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சபை நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

### 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) பதவியணி முகாமைத்துவம
(எ) ஒப்பந்த நிர்வாகம்
(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு